தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. VII.—No. 8.] MADRAS:—SUNDAY FEBRUARY 19, 288. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

சென்னை லௌகிகசங்கம்.	பிரமசுயானபோதனியின [வாகினி.

சென்னை லௌகிக சங்கம்.

"சென்னை லௌகிக சங்கம்" இந்தப் புதுப் பெயர் தரித்த பின்பு, இந்தச் சங்கத்திற்கு இந்தப் புதுவருஷம் மூன்றும் வருஷமாகிறது. இந்தச் சங்கத்துச் சென்ற வருஷத்திய விருத்தாந்தத்தை நமது பத்திரிகா நேயர்களுக்கு வழக்கப்படி சங்கிரகமாகத தெரிவித்துக் கொள்ளுகிறோம.

மெம்பர்களும் கையொப்பநேயர்களும்.

287-ஆ ஜனவரி மாசத்தில் ஜாபிதாவிலிருந்த மெம்பர்கள் சங்கியை 45, இங்கிலீஷ் பத்திரிகைக்கும் தமிழ்ப்பத்திரிகைக்கும் கையொப்ப நேயர்களின் சங்கியை 195. 287-ஆ டிசம்பர்-மீ 31-உயிலிருந்த மெம்பர்கள் 41, கையொப்பநேயர்கள் 165. அநேக ஐரோப்பிய மெம்பர்கள் தேசத்தைவிட்டுப்போய்விட்டார்கள், அநேக கையொப்பக்காரர்கள் மிகுதியாய் பாக்கிவைத்துக்கொண்டபடியால் அவர்களுடைய பேர் அடித்துப் போடப்பட்டது. சுமார் இருநூறு ரூபாய்வரையில் பாக்கி நின்றுவிட்டபடியால், விதியில்லாமல் அப்படிச் செய்யவேண்டி வந்ததற்காக விசனப்படுகிறோம். இந்த வருஷத்திலே கண்டிப்பாய் முன்பணம் வாங்கப்படும், இப்போதிருக்கிற நமது கையொப்ப நேயர்கள் யாவரும் கிரமமாய் பணம் செலுத்துவார்களென்று கோருகிறோம்.

மெஸ்ஸர்ஸ் உல்சன், டேல், மக்ளீன், லாப்லின் அவர்கள் புது கையொப்ப நேயர்களைச் சம்பாதித்துத் தருவதில் மனப்பூர்த்தியான உதவிபுரிந்து வருவதற்காக அவர்களுக்கு வந்தனஞ் செய்கிறோம்.

திங்கர்.

(இங்கிலீஷ்.)

சங்கத்தைச் சேர்ந்த இந்தப் பத்திரிகை நல்லசுடுதாசியிலே சீராய் அச்சிடப்பட்ட எட்டுபக்கங்களுடையதாகத்தான் இன்னு மிருக்கிறது. அதற்கென்றுஎடிட்டர் இல்லாக்குறையால், "The Truthseeker," "Secular Thought," "The Freethinker," "The National Reformer," "The Secular Review" "The Liberator." முதலான பத்திரிகைகளிலிருந்து சங்கதிகளைத் தேர்ந்தெடுத்து அச்சிட்டு வருகிறோம். இந்த சங்கதிகளில சிறந்தவைகளாகிய சிலவற்றை சிறு புத்தகங்களாகவும் பதிப்பித்து வருகிறோம்.

தத்துவவிவேசினி.

(தமிழ்.)

இந்தப் பத்திரிகையை ம-ா-ா- அ. முத்துசாமி முதலியாரும் பு. முனிஸ்வாமி நாயகரும் கூட்டுப் பத்திராதிபர்களாக வெகு திறமாய் நடத்தி வருகிறார்கள். சிறந்த சில விஷயங்கள் சிறு புத்தகங்களாக மறுபடி அச்சிடப்பட்டு நல்ல விலையாகி வருகின்றன. ஸர், ட. மாதவராவ் K. C. S. I அவர்களால் சோதிட மதிமயக்கத்தைக் குறித்து பிரசுரஞ் செய்யப்பட்ட திறமான புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு அவரது அனுமதியின்பேரில் நமது பத்திரிகையில பிரசுரஞ் செய்யப்பட்டதுமல்லாமல் சிறு புத்தகமாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது. அது சோதிடத்தை ஒரு சாஸ்திரமாக மதியீனர்களை நம்பும்படிச் செய்கிற மோசத்தை திரத்துடனே வெளியிக்கிற கிரந்தமாதலால், அதை இவ்வருஷத்தில் விரிவாய்ப் பரவிட எண்ணங்கொண்டிருக்கிறோம்.

கடைசியில் பொம்பாயிலே இரண்டு கையொப்பக்காரர்கள் சேர்ந்திருக்கிறார்கள், ஆனால் கல்கத்தாவில் இன்னும் ஒருவரும் சேரவில்லை. ஆக்கியாபிலே ஒருவரும் மந்தாலேயிலே ஒருவரும் சேர்ந்திருக்கிறார்கள்; இந்தியாவிலே எங்கள் பத்திரிகை செல்லாத பெரிய பட்டணம் ஒன்றுமில்லை.

புத்தக விற்பனை சாலை.

புத்தக விற்பனை சாலையானது உள்ளபடி வெகு நன்மை செய்து வருகிறது, திரவிய விஷயத்திலே சங்கத்திற்குப் பேருதவியாயிருக்கிறது, சுமார் ஆயிரம் ரூபாய் பெறுமான சுவக்கியான புஸ்தகங்களும் சிறு புஸ்தகங்களும் இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வரவழைக்கப்பட்டு, கிட்டத்தட்ட அவையெல்லாம் இந்தியாவின் பலபாகங்களிலும் உடனே விற்பனையாய் விட்டன.

முதற்பணக்குறைவினாலே அடிக்கடி அதிகபுஸ்தகங்கள் வரவழைக்கக்கூடாமையா யிருக்கிறது, சொற்பவிராளவுதவிசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். விராளம் கொடுக்கக்கூடாமையா யிருப்பவர்கள் எங்கள் புஸ்தகங்களில் சிலவற்றையாவது வாங்குவார்களென்றும், வாங்க இஷ்ட முள்ளவர்களுடைய பேர்களையும் இருப்பிடத்தையும் தெரிவிப்பார்களென்றும்கோருகிறோம்.

"The Freethought Publishing Company," "The Progressive Publishing Company," "W. Stewart and Co.," "Messrs Morrish & Co,." "The Truthseeker Company" ஆகிய இந்தக்கூட்டத்தார்கள் தாங்கள் பிரசுரஞ்செய்யும புஸ்தகங்களை எங்கள் சங்கத்திற்குக் குறைந்த விலைக்குக் கொடுத்துவருவதற்காக அவர்களுக்குப் பின்னுமொருதரம் வந்தனம செய்கிறோம்.

எங்கள் புத்தகவிற்பனைசாலையானது சென்ற வருஷத்தில் உபயோகமான வேலை செய்துவந்ததென்பதை, லண்டன் பட்டணம் எக்ஜிட்டர் ஹாலில் இந்திய மிஷனரிகள் செய்த ரிபோர்ட்டுகளை வாசிப்பதினாலே சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். இந்தியாவிலே சுதேசிகளுக்குள் சுவக்கியானம் அதிகமாய் விர்த்தியாவதைக்குறித்தும் சுவக்கியான புஸ்தகங்களும் சிறு புத்தகங்களும் மிகுதியாய்ப் பரவுவதைக்குறித்தும் அவர்களில் ஒவ்வொருவரும் பேசியிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பாடசாலைகளில் மத நூல்களை நுழைப்பதினாலே மிஷினெரி காரியத்திற்கு உதவி புரியும்படி இந்தியாவின் ஸ்டேட்டு செக்ரிட்டேரி யவர்களை வருந்திக் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்தியாவிலிருப்பதுபோல பல்ஜாதியார்கள் கலந்த ஜனங்களுக்குள்ளே. எல்லா வகுப்பாருக்கும் ஒத்திருக்கும்படியான ஒருமதநூல் கிடைப்பது அசாத்தியமே. ஆகையால் மிஷினெரிகளும் துரைத்தனத்தாரும் மத

போதனையாகிய உளைச்சேற்றில் உழன்றுகொண்டிருக்கையில் நாம் சாந்தமாகவே பார்த்துக்கொண்டிருப்போம். பைபிளை வாசிக்கும்படி சுதேச வித்தியார்த்திகள் எவ்வளவு கட்டாயம் செய்யப்படுகிறார்களோ அவ்வளவு அதிகமாய் பைபிளையும் கிறிஸ்துமதத்தையும் கண்டிக்கிற சுவக்கியான புஸ்தகங்களும் சிறுபுஸ்தகங்களும் எங்கள் புத்தகவிற்பனைசாலையில் செலவாகும்.

விர்த்திக்கிடமானவேலை.

கூட்டங்கூடுவதற்கு மந்திரமில்லாமையினாலே கூடி வாசிப்பதற்கும் உபந்நியாசம் செய்வதற்கும தடையுண்டாயிருக்கிறது; இது பெருத்த சங்கட்டமாகக் காணுகிறபடியால், இன்னும் கொஞ்சகாலவரையில் யாங்கள் சிறு புத்தகங்களையும் பத்திரிகைகளையும் பரவச் செய்துகொண்டு திருப்தியடைந்தே யிருக்கவேண்டும்.

சுவக்கியானவிர்த்திக்காக சங்கத்தாரால் பிரசுரஞ்செய்யப்பட்ட சிறு புத்தகங்கள்:—

இங்கிலீஷ்.

Nos.

IV. The Decay of Christian Morality by L. K. Washburn.
V. Social Salvation : A Lay Sermon by Col : R. G Ingersoll.
VI. Why I do not Believe in God by Annie Besant.
VII. The New God by Samuel P. Putnam.
VIII. The Star of Bethlehem by G. W. Foote.
IX. Christian Absurdities by John Peck.
X. Our Substitute for Christianity by Edgar C. Beall.
XI. Popular Objections to Infidelity by Edgar C. Beall.
XII. Social Problems by Col : R. G. Ingersoll.
XIII. Ingersoll's Reply to Talmage. (First Interview.)
XIV. do (Second „)
XV. do (Third „)
XIX. God the Father and Christ the Son by Charles C. Cattle.
XX. Vindication of Secularism by George Jacob Holyoake.
XXI. Ingersoll's Reply to-Field.

(தமிழ்.)

மெய்யறிவு.

பாகம்.	———.	அணா	பை.
1-வது.	புலால்—கொலை—மறுத்தல்.	„	3
2-வது.	ஆத்துமா அழிவில்லாததா ?	„	6
3-வது.	அபிமானமென்பதென்ன?	„	4
4-வது.	நல்லொழுக்கத்திற்கு மறுமைப் பயனது சித்தாந்தம் அவசியமா?	„	4
5-வது.	இயற்கையறிவும், பகுத்தறிவும்.	„	5
1-வது.	இந்துசமயசாரவிளக்கம்.	„	9
2-வது.	ஷை "தசரதருக்குப் புத்திரருண்டா" என்பதுஉள்பட	1	0
	சாதிசமயவாதம்.	„	6
	புராணசங்கை.	„	3
	இந்துசோதிடம்.	1	6

மேற்கண்டபுத்தகங்கள்யாவும் ஞானஒளியைக்காணநண்பர்களுக்கு உதவிபுரிய இரவல்கொடுப்பதற்கு ஏற்றவைகள். தால்மேஜுக்கும் பீல்டுக்கும் இங்கர்சால் எழுதிய மறுமொழிகள பூர்த்தியான சுவக்கியான ஆயுதசாலையாகும்; சுவக்கியானி ஒவ்வொருவரும் அவைகள் இல்லாதிருப்பது கூடாமை.

திரவியவிஷயம்.

சென்றவருஷ வரவுமொத்தம் ரூ 1273—4—3. செலவு ரூ I408—4—3. இவ்விதமாய் அதிகசெலவு ரூ 135—0—0 சங்கத்தாருக்கு கடன்நேர்ந்திருக்கிறது. இந்தக்கடனுக்கீடாக ரூ 200 பெறுமான புஸ்தகங்களும், ரூ 20 பெறுமானசாமான்களும் கையிருப்பிருக்கின்றன. வெளியில் வரவேண்டிய பாக்கி ரூ 190 வரமாட்டாதென்று தோன்றுகிறபடியால் அதை கணக்கில் சேர்க்காமல் தள்ளிவிடலாயிற்று. செக்ரிட்டேரி மிஸ்டர். ஜெ. அப்ஷன் அவர்கள் மேற்படி கடனைச் செலுத்துவதற்காகப் பிரீதியுடனே வட்டியில்லாமல் ரூ 135 கொடுத்திருக்கிறார்.

வரவுவிவரக்கணக்கு.

கையொப்பம்....................	1230—13—0
சுவக்கியானவியாபகநிதி.........	30—15—3
டாக்ட்டர்ஆல்பட்டுஆதரணைநிதி.	11—-8—0
ஆ ...	1273—4—3

சுருக்கியும், இன்னும் மாதாந்தர செலவு ரூ 65 ஆகிறது, ஆனால எட்டு ரூபாய் சம்பளமுள்ள ஒரு சேவகனுக்கு வதிலாக ஐவைந்து ரூபாய் சம்பளத்திலே இரண்டு சேவகர்களை வைத்திருக்கிறோம்.

எங்கள் கையொப்பக்காரர்களில் சிலரிடத்தில் கிரமம் குறைவாயிருப்பதைப்பற்றி இங்கே மறுபடி குறிக்கவேண்டியதாயிருக்கிறது, ஆனால் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பத்திரிகையின் எஜமானனுக்கும் இந்த முறைபாடுதானிருக்கிறது. இந்த தேசத்திலே லௌகிக ஒழுக்கமும் யோக்கியதையும் இன்னும் அதிகப்படவேண்டும்.

புத்தகசாலை.

சென்ற வருஷத்திலே அதிகமாய் சில கிரந்தங்கள் சேகரிக்கப்பட்டன, ஆனால் வாசிக்குமிடமில்லாமையினாலே அதனுடைய உபயோகம் மிகவும் மட்டாயிருக்கிறது.

எங்கள் பத்திரிகைக்கு வதிலாகப் பெறுகிற அடியில் கண்டிருக்கும் பத்திரிகைகள் சென்னையில் வசிக்கிற மெம்பர்களுக்குக்கிரமமாய்அனுப்பப்படுகின்றன:—

The National Reformer.	The Truthseeker.
The Freethinker.	Lucifur.
The Secular Review.	Secular Thought.
The Malthusian.	The Liberator.

அப்பீல்.

தற்காலத்திலிருக்கிற எங்கள் கையொப்பக்காரர்கள் சங்கத்தில் மெம்பர்களாவார்களென்று ஆவலாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். சங்கத்தின் நிபந்தனைகளை வாசித்துப்பார்த்தால், எவராவது சேருவதற்குத் தடையொன்றுமிராதெனறு தெரிந்துகொள்ளலாம். மாசமொன்றுக்கு உள்ளூர் மெம்பர் ஒரு ரூபாயும் வெளி மெம்பர் பத்தணாவும் கையொப்பம் செலுத்தவேண்டும். மெம்பர்களுக்கு இங்கிலீஷ பத்திரிகையாவது தமிழ்ப்பத்திரிகையாவது ஒவ்வொரு பிரதி இலவசமாகக் கொடுக்கப்படும், இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமிருந்து எங்களுக்கு வருகிற சகல சுவக்கியான பத்திரிகைகளும் வாசிப்பதற்காக உள்ளூர் மெம்பர்களுக்கு அனுப்பப்படும். எங்கள் வேண்டுகோள் பிரியத்துடனே அங்கீகரிக்கப்படுமாகில் சங்கத்திற்கு திரவிய சகாயவிர்த்தியுண்டாவதுமல்லாமல் மானிடவிர்த்தியையும் சுகத்தையும் விர்த்திசெய்வதற்கான சங்கத்தின் பெருத்த காரியத்தைப் பின்னும் சீராய் நடத்துவதற்கு அனுகூலமுண்டாகும்.

———

மகாசபை.

288-ம் வருஷம் ஜனவரி-மீ 29-உ ஆதிவாரம் செக்ரிட்டேரியவர்கள் வீட்டில் வருஷாந்தர மகாசபைகூடி அடியில் கண்டிருக்கிற நிகமனங்கள் ஜாரி செய்யப்பட்டன.

(1) செக்ரிட்டேரியால் வாசிக்கப்பட்ட ரிபோர்ட்டை அங்கிகரித்து பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி தீர்மானம்.

(2) J.F. Clegg Esq. அவர்களை 288-ம் வருஷத்திற்கு சபைத்தலைவராக நேமிக்கும்படி தீர்மானம்.

சபைத்தலைவருடைய வாசஸ்தானமாகிய, நாயியர் பார்க்குதோட்டம், இவின் காட்டேஜில் சபை கூடுவதற்கு ஓர் அறையும் புத்தகசாலையும் ஏற்படுத்துவதற்குப் பிரயத்தனம் செய்யப்படுகிறதென்று சென்னை லௌகிக சங்கத்தின் மெம்பர்களுக்கு அறிக்கையிட சந்தோஷப்படுகிறோம்.

பிரமக்கியானபோதினியின் வாதினி.

1888-ளு ஜனவரி-மீ 1-உ வெளிவந்த பிரமக்கியானபோதினி 10 இலக்கம், 32 பக்கம், 3 கலம், கிறிஸ்துமதயானைஎன்ற

மகுடத்தின்கீழ் "வியாசமதவுட்பிரிவாராகிய சைவ, வைணவ,
மாத்வ மதங்களை யநுசரித்த கல்விமான்களாகிய ஆனைக்கு
ட்டிகள் ஆயிரமாயிரஞ்சேர்ந்தாலும் கிறிஸ்துமதயானையை வெ
ல்லமுடியாதென்றும், ஷை வியாசமார்க்கத்தில் சர்வ சிரேஷ்
டமாகிய பிரமத்தியானமார்க்கத்தையநுசரித்த ஒவ்வொருசி
ங்கத்துக்குமுன் கிறிஸ்துமதயானை ஆயிரமாயிரமாக வந்தா
லும பின்னிட்டோடுமென்பதில் சந்தேகமில்லையென்றும், பர
மாத்மா தந்தையென்றும், ஜீவாத்மாக்கள் சகோதரரென்றும்
இன்னன பலகூறியுள்ளதை யிதுசாறு மியாவராகிலுங் கவனி
த்துத் தக்க ... ... போதினியாளென்னுஞ் சிறு
மிக்குப்புகட்டுவார்களென்றெதிர்பார்த்துங் காணுமையால் இச்
சில வரிகளை வரையலுற்றனம்.

பொக்கைவாயன் பொறிமாவைப்புகழ்வதுபோல அவரவர்
தத்தம் மதக்கோட்பாட்டை நியாய வாயிலாக வுணர்த்தாமல்,
மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டாமென்ற நீதியை
யும் பாராமல் சிலர் எம்மதமே பெரிது, எம்மதமே சிரேஷ்ட
ம், எம்மதக்கடவுளேயுள்ளது, எம்மதத்தாலன்றி முக்திகிடை
யாது, எம்மதமே நியாயத்தை வகித்துளது என்று தத்தமிஷ்
டாநுசாரங் கைநோய்கண்டமட்டுங் கடிதங்கொண்டமட்டுமெ
ழுதுகின்றாரென்பதற்குப் போதினியென்னு மாதே சான்றாகி
னாள்:

கிறிஸ்துமதம் அத்வைத சித்தாந்தத்தைக் கண்டித்திருப்ப
தையேனு மல்லது கண்டிக்குந் திறமையுள்ளதென்றேனு மிந்
மைப்போதளவுங் கண்டிருப்பளா! அல்லதுபோதினியென்னு
மிவளேனு மங்களம் புரிவளா! இவளங்ஙனங் கண்டிக்கமுய
லுவளே லிவளைத் துண்டித்தெறிய எம்மாலியலாதா? சைவ,
வைணவ, மாத்வமென்னு மும்மதங்களைக் கண்டிக்கும் வலியு
டைய கிறிஸ்துமதயானையை பிரமத்தியானமென்னுஞ் சிங்கம்
வென்றுவிடுமென்று தன்னைத்தானே புகழ்கின்றாள் ஆ! ஆ!!
இஃது எலியுந்தன்னைப் புலியென்று தன்வளையில் தன வளை
யில் பேசிக்கொள்ளுமத்தன்மைத்தன்றா? இவ்வெலிப்புலி யி
ற்புலி முன் நிற்குமா! இப்போதினியாள் பேசியதுபோல
வே ஏனைய ஒவ்வொரு மதமும் பேசித்தொலைக்குமானால் இ
வள் கதியென்னை! முடிவிலெம்மதஞ் சிம்மமாய் நிறகும்?
மேற்கூறிய வைத்துமன்றோ, ஐந்து இராஜமிருகங்களாய் நிற்
கையில் இவள் தன்னைப் புகழ்ந்த புகழ்ச்சி யிகழ்ச்சியேயன்
றி வேறென்னும்? ஓ, ஓ, பிரமத்தியானசிங்கமே! நினக்கி
க்கதிநேருமென நீ தியானஞ் செய்யும் பிரமமும், நின் தியா
னத்தை யேற்கும் பிரமமுஞ் சொல்லவில்லையோ? அல்ல
திதைக்குறித்து நீ கேட்கவில்லையோ! ஐயோ! நீ தியானஞ்
செய்யுங்கால மப்பிரமத்திற்குறங்குங்காலம்போலும். அன்றியு
ம் பரமாத்மா தந்தையும், ஜீவாத்மாக்கள் சகோதரர்களுமாக
உபமானப்படுத்தப்புகுந்தவள் யாவர்க்குத் தந்தையென்றும்,
தாயின்னுளென்றும், மக்களின்னுரென்றுஞ் சொல்ல மறந்தன
ள்போலும், இது நிற்க.

ஷை மாதம் 15-௳ போதினி 43 பக்கம் முதற்கலம் பிராம
ணர்கொள்கை என்ற தலைப்பின்கீழ் "ஸு விசாலமிதம் விஸ்வம்
பவித்ரம் பிரஹ்மமந்திரம்" என்ற முதல்வரியையுடைய ஸு
லோகத்திற்கு "விசாலமான விந்தப்பிரபஞ்சம் பிரமத்தின் பரி
சுத்தமான ஆலயம்" எனுமுரையையணிந்துள்ளாளே. இதை
யோசிக்குமளவில் பிரபஞ்சமானது நிலநீர்தீக்கால் வானாகியப
ஞ்சபூதஸ்வரூபமேயன்றி வேறுகண்டிலம். அன்றியு மிச்சகத்தி
ற்றோற்றுமனைத்தும் பௌதிகங்களெனப்படும். அவைகளும்
ஷை பூதங்களையன்றியில்லை. எனவே சர்வமும் பஞ்சபூதங்களை
யன்றியில்லையென்றும் இப்பூதங்களே பிரபஞ்சமெனும் பெய
ரைவைத்திருக்கின்றனவென்றுமாகின்றது. இத்தகைய பிரப
ஞ்சம் பிரமத்திற் காலயமாம்போது பௌதிகங்களெல்லா மப்பி
ரமத்திற் காலயமாவதி லையமில்லையல்லவா? இதனாலிதைச்
சொன்ன போதினியாளும், யாவர்க்குச்சொன்னாளோ அவர்
களும், எவர்களைச்சொல்லாதொழிந்தனளோ அவர்களும் ஏ
னைய சராசரப்பொருள்களுமப்பிரமத்திற் காலயமாய் நிற்கை
யில் மேற்படி சுலோகார்த்தத்தில் "ஞானமே பரிசுத்த தீர்த்
தம், சத்தியமே சாஸ்விதமான சாஸ்திரம், விஸ்வாசமே தர்ம
த்திற்குக் காரணம், அன்பே சிரேஷ்டமான சாதனம், யானெ
னதென்னும்பற்றை யொழிப்பதே வைராக்கியம்" எனப் பகர்
ந்தது யாவர்க்கு, அல்லதியாதுக்கு? ஆலயத்திற்குத்தானே.
அல்லவெனின் மற்றியாதுக்கு? ஆலயத்துளிருக்கும் பிரமத்
திற்குத்தானே. மேலே நான் ரூபித்த பௌதிகங்களிலொன்றாகி
யபோதினியாளெனு மிவள்கோயிலிலுள்ளதுதானே மற்றக்கோ
யில்களிலுமுண்டு. அல்லவெனின் ஏனையகோயில்களி லென்னு
ளது? ஒவ்வொருபொருளுந் தனித்தனியாலயமாகமுடிய இவள்
பிரமமந்திரமென்றொன்றைப் பிரத்தியேகமாயமைத்து அதிற்
போய்ப் பிரமோபாசனை செய்வதேனோ! பிரமோபாசிகள் பிர
மமந்திரஞ்செய்வது ஆலயத்துள்ஆலயத்தைப்புகுவிக்கின்றதன்
மையல்லது வேறுபொருளுளதே லுணர்த்தல்வேண்டும். இவள்
கதியிம்மட்டிருக்க ஷை பத்திரிகை பிரம்ம பிரார்த்தனை யொவ்
வொன்றிலும் "உமது குழந்தைகளாகிய இந்துவென்னும் நா
ங்கள் பிம்பாராதனையிலழுந்தாமலும், பிரமமே நாங்களென் ற
கங்கரிக்காமலும், பிரம்ம நம்பிக்கையிற் பிசகாமலும், இக
த்திலும் பரத்திலும் இன்பத்தைப் பெறும்படி பிரார்த்திக்கி
றோம்." என்றோலமிட்டழுதுறலிடுகின்றதுதான் பரிதாபத்தி
லும் பரிதாபமாயிருக்கின்றது. எப்படியென்றால்,—சராசர
ங்களாகிய திருஸ்யப்பொருளொவ்வொன்று மாலயமாகவும்
(ஷை ஆலயங்கள் பாழுங்கோயிலெனும் பெயரெடுக்காமல்)
ஒவ்வோராலயத்தினும் அதிருஸ்யமான பிரமமே தெய்வமாக
வீற்றிருப்பதாகவுமுரைத்து மீண்டும் "பிரமமே, பிரமமே"
என்னை யப்படிச்செய்யாதே, யிப்படிச்செய்யாதே, அப்படிச்
செய் இப்படிச்செய் என்று கதறிக் கதறிக் கற்றுகின்ற தெற
றுக்கு? யாரைநோக்கி யார் அழுகின்றதென்று முன் சுலோ
கத்தை கவனிப்பளேல் அழற்கிடமுண்டாமா! ஒவ்வொன்றி
னும் விரிவஞ்சியே விடுகின்றோமென்பதைப் போதினியாள்
நன்குணரக்கடவள். மேலும் உமது குழந்தைகளாகிய இந்
துவென்னும் நாங்கள் ஆசாபாசங்களினின்றும் நீங்கி சுகத்
தையடையவேண்டுமென்றால் இதரதேசத்தோரெல்லாரும் மப்
பிரமத்திற்கென்ன சம்பந்தமாகவேண்டுமோ! பேரப்பிள்ளைக
ளா? மாமன்மார்களா? மருமக்களா? மற்றதேசத்தார்
கதியென்ன? அதோகதிதானா! அல்லது நின்ஜபம் அவர்க
ளிடம் பலிதமாகாதெனறா? இதுதானா வொற்றுமைக்கும்
அபேதத்திற்கு மிலக்கணம்! யார்கெட்டுக் குட்டிச்சுவரானா
லுமென்ன, நாம் வாழ்ந்தாலே போதுமெனுங் கருத்துடையோ
ர்யாவர்? தன்னிடத்திருக்கு மாபாசங்களைத் தானகற்றவழி
பாராம லன்னியர்களுபதேசிக்கப் புகுந்ததும் விந்தைதானே.

முற்கூறிப்போந்த நியாயத்தானே போதினியாள் "பிம்பா
ராதனை பிம்பாராதனை" யென்றழுமழுகையாது பிரயோசனமு
டைத்து? ஆலயமாலயத்தைத் தொழுமா? அல்லதுபிரம்
மம் பிரம்மத்தைத்தொழுமா? அதுபோல சரீரம் சரீரத்தைத்
தொழுமா! அல்லது சரீரி சரீரியைத் தொழுமா! மேலுரை
த்த ஸுலோகார்த்தப்பிரகாரம் திருஸ்யப்பொருள்களெல்லா
மாலயமாகவும் அவ்வொவ்வொன்றினும் பிரமந் தெய்வமா
கவீற்றிருக்கும்பட்சத்தில் சரீரியாகிய நாங்களே பிரமமென்றே
ன் நவிலக்கூடாது? ஷை சுலோகவாயிலாக சரீரமே கோயி
லாகவும், சரீரியே பிரமமாகவும் போதித்த போதினியாள் மீ
ண்டும் அதை மறந்து தன்னை யெதுவாகவோ தீர்மானித்துப்
பிதற்றவாரம்பித்தனள். இஃதழகழகு! அன்றியுமிது போதி
னியாளின் பாலியாவஸ்தைக்காலமாகையால் அவள் பிதற்றலை
மட்டுமெடுத்தோதினேனுமல்லது அம்மின்னாள்பேரில் வருத்தமு
றுகின்றிலம்.

நிகழும் பிப்ரவரி–மீ 1-௳ பத்திரிகை 46-பக்கம், **பிரம்ம
சமாஜம்** என்ற மகுடத்தின்பின் 47-பக்கத்தில், ஜடசம்பந்
தமான சரீரத்தையே ஆண் பெண் அலியாகச்சொல்வதேயன
றிச் சித்ரூபமான ஆன்மாக்கள் ஷை மூன்று மற்றதெனப்போ
தித்து ஷை பக்கம் இரண்டாங்கலத்தில் "எவ்விடத்துங் கடவு
ள் கைகால்களிருக்கின்றன, எவ்விடத்து மவர் தலை முகம் க
ண்களிருக்கின்றன" என மனுஷ்யாளின் சில வுறுப்புகளைப்
புகன்றிருப்பதைப்பார்த்தால் ஆணாகவேனும், பெண்ணாகவேனு
ம், அல்லதலியாகவேனுமிருக்கவேண்டுமேயல்லது ஷை மூன்
றுமற்றிருப்பதெனின் அவ்வவயவங்கள் ஆணினதா, பெண்
ணினதா, அல்லதலியினதா வென்று சந்தேகிக்கவிடமுண்டா
கின்றது. மேலும் சடமாகிய நம்முடைய சரீரத்துளிருப்
பது சித்ரூபமாகிய ஆத்மா அல்லது பிரமமெனப் புகன்று மீ
ண்டு மப்பிரமத்திற் கவயவங்களையுடைய சரீரத்தை நவின்று
ள்ளதால், பின்னுமப்பிரமசரீரத்தி லந்தர்யாமியாயிருக்கும் பிர
மம் வேறொரு பிரம்மம்போலும். இங்ஙனே மேல்நோக்கின் பீ
ஜவிருக்ஷ நியாயந்தான் பலனோ! சிறு பெண்ணாகிய விவள்
பெருங்காரியத்தில் தலையிட்டதன் லாப மிப்போதனையேதா
னோ!

ஷை பத்திரிகையிலடங்கிவந்த உபபத்திரிகை. **வேதாந்தம்
விளங்குமா** என்ற தலைப்பின்கீழ், "அறிவிற்சிறந்த இஷ்டரே!
யெனவிளித்து வேதாந்தத்திலோர் சார்பாராகிய அத்துவிதி
கள் கருத்துப் பிசகென்பதைத் தற்கால விவேகிகள் ஒப்புக்
கொள்ளுவார்கள்" என்ற விவள் வேதாந்தத்தி லித்தனை பிரி
வென்றும், தற்கால விவேகிகளாலங்கீகரிக்கப்பட்டுள்ள பிரி
வுகள் இன்னின்னதென்றும் போதிக்க மறந்தனள். ஒரு கா
லினி வரும் பத்திரிகையில் போதிப்பளோ அல்லது நழுவவி
டுவளோ அறிகிலம். அன்றியும், "பஞ்சபூதங்களும், பஞ்
சேந்திரியங்களும், மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களும்
நானல்லவெனபதுண்மையே (ஜீவனாகிய) பிராணனும் நானல்
லவென்பது அறியாமையே" என வறிவிற் சிறந்தோர்க்கு
மேலான வறிவையுடையவிவள் தத்வக்ஞானம் சுழல்காற்றுற்
ற பஞ்சுபோல் பறப்பதைப் பின்வருவனவற்றாலுணர்க.

தசாண்டுச்சிறுமி சதாண்டுசர்ச்சை செய்யினும் புலப்படவ
ரிதாகிய தத்வக்ஞானத்திற் முன் பூரணமடைந்து விட்டவள்

போல போதிக்கப் புறப்பட்டதை யிளங்கன்று பயமறியாத் தன்மைக்கு உவமிப்பவமேயன்றி வேறறியோம். எப்படியெனில் பூதபஞ்சகம், ஞானேந்திரியபஞ்சகம், கர்மேந்திரியபஞ்சகம், பிராணாதிபஞ்சகம் அந்தக் கரண சதுஷ்டயம், சிதாபாஸன் அல்லது ஜீவன் என்று பிராணனை ஜடாம்சமாகவே போதித்த பேரறிவுடைய வேதாந்த சிரோமணிகளெல்லாஞ் சான்றாய் நிற்கப் பத்துவயது பெண்ணாகியவிவள் "நான் என்பதே பிராணன், பிராணனென்பதே நான்" என்றும் "என் பிராணன் போகிறதென்றாலும், நான் போகிறேனென்றாலும் பொருளொன்றே" என்று பிதற்றி யிருப்பது பேதைமையினும் பேதைமையே. எங்ஙனமெனின் "பிராணன்" என்றால் உஸ்வாஸநிஸ்வாசஞ் செய்யு மூச்சாகிய காற்றேயென்றும் இதைச் சடமாகப் பேசியதன் காரணம் ஜாட்டிய நித்திரையிலேனும் அல்லது புத்தியை யாதானுமோர்விஷயத்திலழுந்தச் செலுத்தியிருக்கும்போதேனும் அறிவிழந்திருப்பது சஹஜமேயன்றி சுவாசத்தை யிழந்திருப்பது சாதாரணமன்று. மூச்சாகிய அப்பிராணன் நித்திரையில் வியவகாரதசையி லிருப்பதைவிட அதிகமாகவிருந்தும் ஒருவன் கத்தியை யெடுத்துவெட்ட வருவனேயாயின் அதையறியாதிருக்குந்தன்மையால பிராணனைச் சடமென்றார் அறிவிற்சிறந்த பெரியோர். அக்கருத்தறியா விந்நங்கையாகிய போதினியாள் தன் சுவானுபூதி பிரத்தியட்சமுறைக்கப்புகுந்து அறிவுடையோர் வாக்குகளை யநர்த்தஞ் செய்தவர்கட் கவமானத்தை யுண்டுபண்ணப்புறப்படினும், விவேகிக்குந்தன்மையே சொரூபமாகவுடைய **தத்துவவிவேசினிவிடுவளா**?

மேலும் "என் பிராணன்போகிறதென்றாலும் நான் போகிறேனென்றாலும் பொருளொன்றே" என்கின்றாள். ஐயோ போதினியெனுஞ் சிறுநங்காய்! "என் கழுதை போகிறது, நான் போகிறேன்" என்ற சிறுவாக்கியங்கட்கு நின்பொருட்படியே கழுதையென்பதும், நானென்பது மொன்றாகவேண்டுமன்றோ? வேண்டின் போதினியாகிய நீ எதுவாகின்றாய்ப் பார்மின். "என் கழுதை, என்மனம், என் மயிர்" எனுஞ் சொற்றொடர்களினும், "நான் போகிறேன், நான் வருகிறேன், நான் உண்கிறேன்" எனுந் தொடர்களினுமுள்ள "என்" என்பதை யோர் சார்பாகவும், அதைச் சார்ந்த "கழுதை, மனம், மயிர்" இவைகளை யோர் சார்பாகவும் அதுபோலவே "நான்" என்பதை யோர்புறமும் அதன் தொழில்களாகிய "போகிறேன், வருகிறேன், உண்கிறேன்" இவைகளை யோர்புறமுமாக்கிப் பார்க்கையில் கழுதை, மனம், மயிர் இம்மூன்றும் **என்** எனுங் கர்த்தாவிற்குரிய தற்கிழமைபிறிதின் கிழமை பொருட்களாகவும், போகிறேன, வருகிறேன், உண்கிறேன் என்பனவோ **நான்** என்னுங்கர்த்தாவின் கிரியைகளாகவும் நன்கு புலப்படுவதுமன்றி "என் மனை, என் மகவு" என்பனவற்றுள் **மனை, மக** வெனும் பொருள்கள் **என்** எனுங் கர்த்தாவுக்குச் சொந்தத்தைக் காண்பிக்கினும் பிரிவினைக்குட்படும். ஆனால் நான் கேட்டேன், நான் பார்க்தேன்" என்பவைகளில் **கேட்டேன் பார்த்தேன்** இவை **நான்** எனுங் கர்த்தாவின் செயல்களாகவும் பிரிக்கப்படாதனவாகவுமிருக்க "என் பிராணன் போகிறது, நான் போகிறேன்" என்ற வாக்கியங்கட்குப் போதினியாள்விபரீதார்த்தஞ் செய்திருக்கின்றாளேயன்றி சுவானுபூதியாய்ப் புலப்படுகின்றிலள். இவள் நியாயபோதனை நமக்கு வாதனையேயன்றி வேறல்ல, இவ்வயுக்த வாபாசபோதனையைத்தானா அறிவிற்சிறந்தோருக்குப் போதிக்கின்றேனென்று புறப்பட்டனை சிறுமியே! இது சிரிப்பே!

அங்ஙனேயுரைத்தவளவிலும் நில்லாமல் "இதையத்துவிதிகள் தெரிந்துகொள்ளாமல், சொன்னதைச் சொல்லுங் கிள்ளைபோல் தாங்களு மயங்கி மற்றவர்களையு மயங்கச்செய்கிறார்கள், இது மிகவும் பரிதாபம்" என்று போதினியாள் தன் தற்போதனையைக் கேளாதவர்களுக்காகப் பரிதபிக்கின்றாள். ஓ, சிறுபெண்ணே! அத்துவிதிகள் சொன்னதைப் பிழையறச் சொல்லுங் கிள்ளைகளைப்போலேனு மிருக்கின்றார்கள்; அதுதானுமில்லா நீ **பிரம்மக்கியானபோதினி** எனும் பெயரைப்பூண்டு பிரமத்தியானத்தைப் போதிக்கின்றாயே. இஃதென்ன மயக்கம்! ஓர்கால் பிரமச்ஞானபோதினியென்பதற்குப் பேரறிவைப்போதிப்பவள் எனுமர்த்தத்தில் வந்தாலும் பேரறிவாவதியாது? சிற்றறிவாவதியாது? அவ்விரண்டி னிலக்கணமென்னை? அதைப்போதிப்பதனாலென்னபயன்? அதை அறிந்துகொள்வதன்லாபமென்னை? முதலிய பிரசினைகள் பின்றொடரும். இவ்வித்ஜாலங் காட்டுவதைப்பார்க்கினும **பிரம்மக்கியானபோதினி** எனும் பெயரை நீக்கி **பிரம்மத்தியானபோதினி** யெனும் பெயரைத்தரித்தாலொருவா றமையுமென அறிவுளோர் மதிப்பர். சிறுமியே, யேனையோர்களுக்காக நீ பரிதபித்ததுபோய் உன்னைநோக்கி நாம் பரிதபிக்குங்காலம் நேர்ந்தமையும் வியப்பே!

அவ்வொரு பரிதாபத்தோடும் நிறுத்தாமல் "வாக்கு மனதுக்கு அகோசரமாகிய ஒப்புயர்வற்றவொன்றான **பிரமமேநான்** என்று சொல்வது அதிலும் பரிதாபமானதே" என மென்மேலும் பரிதபிக்கின்ற இவள பரிதாபத்தைப் பாருங்கள். வாக்கு மனதுக்கு எட்டாததென்று சொல்லுமிவள் அதை யேனையர்க்கெவ்வணம்போதிப்பாளோ? அதையிவளெப்படியறிந்தாள்? ஒப்புயர்வற்ற வொன்றானதை பிறர்க்குபதேசிப்பதெப்படி? நங்காய், நீ யறிந்துதான போதிக்கப்புகுந்தனையா? அல்லதறியாமலா? இங்கும் விரிவஞ்சிவிடுகின்றோம். பிரமமே நானென்பதை யங்கீகரிக்கற்பாற்றென்பது போதினியாளின் கருத்தென முன்னரே தீர்மானித்திருக்கின்றோம், மீண்டு மதையிவண் பேசப்புகுதல் அழகன்றென விடுத்தனம். நிற்க. "புத்தகத்தின் ஏடு, அட்டை, எழுத்து, வாக்கியம் சகலமும் புத்தகமல்லவென்பதை யொழித்தபின், புத்தகமொன்றிருப்பது மெய்யானால்; தேகம், இந்திரியம் முதலிய சகலமும் ஒழிந்தவிடத்து **நான்** என்பதொன்றிருக்கிறதென்பது மெய்யாகும்" என்று தத்துவ விவேசினி பத்திராதிபர் போதினியாளுக்கு 1-10-82 ல் மறுமொழி கூறியதாகவும் அதனை ஷை பத்திராதிபர் பொதுநிலையில் நிற்காமல் நாஸ்திகக் கருத்துக்குச் சார்பாய்ப் பேசுவதுபோலிருக்கின்றது என்றிச்சிறுமி யோலமிடுகின்றாள. இதனையுமொருவாறு கவனிப்போம.

பாஞ்சபூத பௌதிகமாகிய இப்பிரபஞ்சத்தின்கண் உள்ள பொருள்களியாவும் ஐந்துவகைப்படுமென்றும் அவற்றுள் தாபரங்கள் ஸ்பரிஸமென்னு மொரே யறிவையுடையனவெனவும் சிப்பி, சங்கு முதலியன ஸ்பரிஸ, ரஸமென்னுமிரண்டறிவையுடையனவெனவும்; எறும்பு, கறையான் முதலியன ஸ்பரிஸ, ரஸ, கந்தமென்னு மூவறிவையுடையனவெனவும்; ஞிமிறு தீவட்டுவண்முதலியன ஸ்பரிஸ, ரஸ, கந்த, ரூபமென்னும் நான்கறிவையுடையனவெனவும்; புள், விலங்கு, நரர் முதலியன ஸ்பரிஸ, ரஸ, கந்த, ரூப, சத்தமென்னு மையறிவை யுடையனவெனவு மறிவிற்சிறந்த பெரியோர் வகுத்திருக்கின்றதை **அறிவிற்சிறந்தவர்கட்கே** போதிக்கப்புறப்பட்ட போதினியாள பருவம்போதாத காரணத்தாலிந்நியாயமறிந்திலளோ அல்லதியாது காரணமோ?

மேற்கூறிய (ஸ்பரிஸ) நிற்பன, நகர்வன, ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய ஐவகைப்பொருள்களில் **புத்தகத்தைப்** போதினியாள் எதுவாக நினைந்துள்ளாள்? ஸ்பரிஸாதி யைந்து மற்ற வொன்று என்னை வருத்தாதே என்று சொல்லற்கேனும் அல்லதற்குரிய குறிப்பினாலேனுங் காட்டற்கென்னவுண்டு நியாயம்? சர்வ சாதாரணமான விதனை யோர்பொருளாகக்கருதியதுகொண்டு தத்துவ விவேசினி பத்திராதிபனை நிலைதவறியதாகக்கூறுவது "சர்க்கரையினிகருது பார்த்தீரா" என்பதை யொக்கும். உலகத்திலுள்ள யாவத்பொருள்களுமே ஐயறிவோடிராததற்குக் காரணமென்ன! சிலவொன்றும், சிலவிரண்டும், சிலமூன்றும், நான்கும், ஐந்துமான வறிவுகளை வகித்திருப்பானேன்! நியாயமிப்படியிருக்க; ஏடு, எழுத்து முதலியனவுடைய புத்தகம் அசித்துப்பொருளென்றும் அதுபோல அகக்கரணம், புறக்கரணமுதலியனவுடைய தேகமு மசித்தென்றும் அதிலிருக்கும் பிராணனென்னும் ஜீவாத்மா சித்பொருளென்றும் அதற்குத் திருஷ்டாந்தமாக புத்தகத்தின் ஏட்டைக் கிழித்தா லென்னை வருத்தாதே யென்னுதென்றும், ஆனால் சரீரத்தினோர் அவயவத்தை யொருவனடிக்கப்புகின் அவ்வாறுகூடுமென்றும, அன்றியுந் தப்பித்துக்கொள்ள வகையுந்தேடுமென்றும் சொல்லினையே, மேற்கூறிய ஐயறிவுகளாலன்றி நின் நியாயத்தை நிலைநாட்டவல்லையாயின் அதையெடுத்துப்பேசவதுகாலமாகுமென்றிதனை நிறுத்துகின்றனம். இவ்விஷயமுதல் அவ்வநுபந்த முடிவுபரியந்தமதைச் சார்ந்ததாகவேயுள்ளமையால் போதினியா ளினிகொடுக்கும் நியாயத்தைநோக்கிச் சமாதானமருளச் சித்தமாயிருக்கின்றனம்.

கிருஷ்ணகிரி உண்மைவிரும்பி.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ் செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலு முள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு அரை அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 0—13—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்தற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.